# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,872 — 1969 සැප්තැම්බර් 19 වැනි සිකුරාදා — 1969.9.19

14,872 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 1015 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1028 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 1032 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 1033 |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியினும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசகாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. : AA 79/x. 2142/69

## கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு

### சிரேட்ட சேயல்திட்ட உத்தியோகத்தர் பதவிகள்
### (இயந்திர, இரசாயன பொறியியல்)

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சில் இரண்டு சிரேஷ்ட செயல்திட்ட உத்தியோகத்தருக்கான (இயந்திர, இரசாயன பொறி இயல்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பட்டு பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1969.10.2.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1969.10.9.

**குறிப்பு.—**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவுக்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். அபேட்சகராக இருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவத் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத்தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள பரீட்சார்த்திகள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளில் உள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அப்பரீட்சார்த்திகள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவ சோதனையும் பயணச் செலவும்**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாயிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவ சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **வேலையின் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**— இப்பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரமும் இளைப்பாறும் சம்பளமுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டால், அவருடைய நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதில் நியமன அடிப்படையிலிருக்கும். நியமனத்திலிருந்து 3 வருடங்களுக்குள் கீழ்வரும் பாடங்களைக் கொண்ட பரீட்சையொன்றில் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் சித்தியடைய வேண்டும். 3 வருடகால காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடையத்தவறினால், சம்பள உயர்வு பின்போடப்படும்.

(i) நிதிப் பிரமாணங்கள்.

(ii) பரிபாலன பிரமாணங்களும் அரசாங்க சேவை அதிகாரசபையின் ஒழுங்கு விதிகள் (இந்தப் பரீட்சையின் நிலைமை இலங்கை பரிபாலன சேவை உத்தியோகத்தர்களுக்கு நடைபெறும் முதலாம் திறமை கடப்புப் படிப் பரீட்சைக்கு சமமாகும்.)

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் பின் வருமாறு :—

வருடச் சம்பளம் ரூபா 13,800 இல் ஆரம்பமாகி வரும் ரூபா 600 கொண்ட 4 வருட உயர்வுகளால் ரூபா 16,200 வரை உயரும்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு பரீட்சாத்தியும் பின்வரும் தகைமைகளை யுடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) பரீட்சார்த்தி சிறந்த நற்குணமுடையவராகவும், உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.10.2 ஆம் திகதியில் 35 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதுக் கட்டுப்பாடு கிடையாது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட இயந்திர எஞ்சினியர்களின் தாபனத்தின், இணைக்கப்பட்ட அங்கத்தவராகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட இரசாயன எஞ்சினியர்களின் தாபனத்தின் இணைக்கப்பட்ட அங்கத்தவராகவோ அல்லது இதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை பெற்றவராகவோ இருக்கவேண்டும். அத்துடன் இந்தத் தகைமைகள் பெற்றபின் ஆக்க்குறைந்தது 10 வருட வேலை அனுபவம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

(ஈ) கைத்தொழிற் திட்டங்களை முறைப்படுத்துதலிலும் மதிப்பீடு செய்தலிலும் உள்ள அனுபவம் விசேட தாராதரமாகக் கருதப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சமய தீட்சைச் சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்

**குறிப்பு :—**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டி. ஆர். எஸ். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
1969.9.12.

9—712/1—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

இல. A. 69/X. 2149/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் (சிங்கள மொழிமூல) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்நாட்டு விண்ணப்பங்கள், 1969.10.2.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.10.9.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருந்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளப் பிரமாணங்களின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுமுன் உபகாரச சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஆசிரியர்களாக வகித்த நியமதாரிகளைப் பொறுத்தவரையில் இப்பதவிகள், அவர்கள் வகிக்கும் வரை உபகாரச்சம்பள உரித்துடையனவாகப் பிடகனஞ் செய்யப்படும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள எவ்வாசிரியர் கலாசாலைக்கும் நியமிக்கப்படக்கூடும்.

**3. சம்பளங்களும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 5,520—8 × 360—2 × 480—ரூ. 9,360 வருடாந்தம்.

**4. தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 2 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) குறைந்த பட்சம் 10 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பயிற்றப் பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆசிரிய கலாசாலையில் படிப்பித்த அனுபவம் நிருவாக அனுபவம் மேலதிக தகைமைகளாகக் கணிக்கப்படும். அபேட்சகர்கள் சிங்களத்தில் சிறந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத்தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு** : (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப் பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.9.12.

9–712/2—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## தொழிற்றிணைக்களம்

### தொழின்முறைப் பயிற்சி நிலையப் போதனாசிரியர் பதவிகள்

தையற் தொழில் போதித்தற்காக போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திலுள்ள பொருளுக்கமைந்தனவாகச் செய்யப்பெற்று, “ தொழில் ஆணையாளர், பௌத்த வாலிப சங்கக் கட்டடம் (3 ம் மாடி), கொழும்பு 1 ” என்ற முகவரியில் 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப் படுதல்வேண்டும்.

2. **சம்பளம்.**—மாதமொன்றுக்குச் சகல படிகளுமுட்பட ரூபா 400 முதல் ரூபா 450 வரை.

**குறிப்பு.**—தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் தகைமைகள், அனுபவம், திறன் என்பவற்றை அனுசரித்தே கொடுக்கப்பட வேண்டிய உண்மையான சம்பளத்தின் வீதம் நிருணயிக்கப்படும்.

3. **நியமனத்திற்கான நிபந்தனைகள்.**—நியமனமானது, முதலாவதாக, தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதற்கிணங்க, விதிக்கப்படும் காலமொன்றுக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும். தேவைப்படின், ஒப்பந்தக் காலம் பின்னர் நீடிக்கப்படக்கூடும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

(i) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துதற்கு, குறிப்பாக, 1956 ம் ஆண்டின் 33 ம் இல. உத்தியோக மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் எப்பிரமாணங்களுக்கும் அமைந்தொழுக வேண்டியவர்களாவர்.

(ii) தெரிவுசெய்யப்படும் அவ்வபேட்சகர்கள் பிணைப் பணமாக ரூபா 1,000 ரொக்கம் கட்டுதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவைபுரிய வேண்டியவர்களாவர்.

5. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பகாரரொவ்வொருவரும் தாம்—

(i) இலங்கையரென்பதற்கும், 25 வயதுக்குட்படாதவரென்பதற்கும், 45 வயதுக்கு மேற்படாதவரென்பதற்கும், (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை இயைபுடையதன்று)

(ii) (அ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களப் பாஷை/தமிழ்ப் பாஷை, கணிதம்/எண்கணிதம் என்பன உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றுள்ளார், அல்லது

(ii) இதற்குச் சமமான அல்லது உயர்வான பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்பதற்கும்,

(ஆ) குறித்த தொழிலில், அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது பிரசித்திபெற்ற வர்த்தகத் தாபனமொன்றில் ஆயின் விரும்பத்தக்கதாகிய யாதாயினும் பயிற்சிக்காலம் அல்லது தொழில் பழகுங்காலம் நீங்கலாக, 5 ஆண்டு செய்முறை அனுபவமாயினும் உடையரென்பதற்கும்,

(3) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையரென்பதற்கு திருத்திகரமான சான்று அளித்தல்வேண்டும்.

**குறிப்பு.**— (i) மேற்கூறிய தகைமைகளுடன், குறித்த தொழிலில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமுறி (டிப்புளோமா)த் தராதரப் பத்திரமுடையவர்கள் பெரிதும் விரும்பித் தெரிவு செய்யப்படுவர்.

(ii) ஒரு தொழிற் பரிசோதனை, போதித்தலிற் செயற் தேர்வு என்பவற்றின்பின்னரே விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படுவர்.

(iii) குறித்த தொழிலில், அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது பிரசித்திபெற்ற வர்த்தகத் தாபனமொன்றில் ஆயின் விரும்பத்தக்கது ஆகிய யாதாயினும் பயிற்சிக்காலம் அல்லது தொழில் பழகுங்காலம் நீங்கலாக 10 ஆண்டு செய்முறை அனுபவமாயினும் உடையராகி, கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது 8 ந் தரத்திற் சித்தி பெற்றிருப்பவர்களின் விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

6. இப்பொழுது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அந்தந்தத் திணைக்களங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல்வேண்டும். அவ்வபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படின், அவர்களைச் சேவையினின்றும் விடுவித்தற்குச் சம்மதிப்பதாக அத்திணைக்களங்களின் தலைவர்கள் சம்மதிக்குமிடத்து மாத்திரமே, அவ்வபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

7. விண்ணப்பங்களுடன், பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்படுதல்வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்—

**(முக்கிய குறிப்பு** : சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச்சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) (i) பெற்றுள்ள மிகவுயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழ்.

(ii) குறித்த தொழிலிற் பட்டமுறித் தராதரப் பத்திரம் யாதாயினுமுண்டாயின்.

(இ) குறித்த தொழிலில் ஐந்து ஆண்டு அனுபவமாயினுமுண்டெனப்பதற்கு ஆதாரமான தராதரப் பத்திரம் அல்லது சாட்சிப் பத்திரம்.

(ஈ) சமீபத்திற் பெற்ற இரு குணச் சான்றிதழ்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் இப்பத்திரங்களை இணைக்கவேண்டியதில்லை).

விண்ணப்பகாரர்கள் தமது சாதனங்களின் மூலங்களை நேர்முகப் பரீட்சையிற் சமர்ப்பித்தல்வேண்டும். நேர்முகப் பரீட்சையின் தேதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

ரீ. ஆர். ஆர். விஜேவிக்கிரம,
தொழில் ஆணையாளர்.

(முன்கூறப்பட்ட படிவம்)

**தொழிற்றிணைக்கள, தொழின்முறைப் பயிற்சி நிலையப் போதனாசிரியர் பதவிகள்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)
2. முகவரி : ————.
3. (அ) 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ந் தேதியன்று வயது........ ஆண்டு........ மாதம்........ நாட்கள்.
(ஆ) பிறந்த தேதி—.
4. பிறப்பிடம் : ————.
(அ) விண்ணப்பகாரரினது : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தையினது : ————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டனாரினது : ————.
5. எத்தேசத்தவர் : ————.
6. கல்வித் தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
7. தொழிற் தகைமைகள் : ————.
(பட்டமுறி (டிப்புளோமா)ப் பத்திரத்தின் அல்லது மற்றும் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்)
8. தொழில் அனுபவம் பற்றிய முழுவிவரம் : ————.
(பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
9. பின்வருவனவற்றிற் போதித்தற்குத் தகுதியுடையரா ?—
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) தமிழில் : ————.
(இ) ஆங்கிலத்தில் : ————.
10. நற்சாட்சிச் சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்கள் : ————.
11. மற்றும் விவரங்கள் : ————.

————
தேதி : ————. விண்ணப்பகாரரின் ஒப்பம்.
(பொருத்தமற்றவற்றை நீக்கிவிடுக)

9-707/1—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## தொழிற் பகுதி

தொழின்முறைப் பயிற்சி நிலையங்களில் பின்வரும் போதனாசிரியர் தானங்களுக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப்பத்திரத்திற் செய்யப்பட்டு 30.9.1969 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்வண்ணம், " தொழில் அதிபர், தொழிற் பகுதி, பௌத்த வாலிப சங்கக் கட்டிடம், (3 வது மாடி), கொழும்பு 1 " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) பொது மின்சாரவேலை.

(ii) பொருத்துதல்.

2. **சம்பளம்.**—மாதமொன்றுக்குச் சகலபடிகளுமுட்பட ரூ. 400 முதல் ரூ. 450 வரையான கட்டணம்.

**குறிப்பு.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய உண்மையான கட்டணம், அவர்களின் தகுதிகள், அனுபவம், திறன் ஆகியவற்றை அனுசரித்தே தீர்மானிக்கப்படும்.

3. **ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்.**— நியமனம், முதலாவதாக தொழில் அதிபரால் தீர்மானிக்கப்படுதற்கமைய, விதிக்கப்பட்ட கால மொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும். வேண்டுமாயின் ஒப்பந்தக் காலம் பின்னர் நீடிக்கப்படக்கூடும்.

**முக்கிய குறிப்பு.**—தெரிவுசெய்யப்படும் போதனாசிரியர் தமது தொழிலில் மேலும் பயிற்சி பெறும்பொருட்டு இந்தியாவுக்கு அல்லது மற்றும் யாதாயினும் தேசத்திற்கு அனுப்பப்படக்கூடும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—

(i) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டு வருதற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழியின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்கும் ஏற்கெனவே ஆக்கப்பட்டவையும் இனிமேல் ஆக்கப்படுபவையுமான விதிகளுக்கமைந்தொழுக வேண்டியிருக்கும்.

(ii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகரொவ்வொருவரும் ரூ. 1,000 ரொக்கத் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும்.

5. **வயது வரையறை.**—25 வயதுக்குட்படாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை பொருந்தாது).

6. விண்ணப்பதாரர் பின்வரும் தகுதிகளையுடையராயிருத்தல் வேண்டும் :—

**(i) கல்வித் தராதரங்கள்.**—

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையராயிருத்தல் வேண்டும் அல்லது பொதுத் தராதரக் கல்வி (சாதாரண)ப் பரீட்சையில் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத சமயங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) அதற்குச் சமமான அல்லது மேலான கல்வித் தராதரப் பத்திரம்.

**(ii) தொழில்நுட்பத் தகுதிகள்.**—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஆ) கல்லோயா அபிவிருத்திச் சபைத் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் தகுதித் தேர்வுப் பத்திரம், அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழின்முறைப் பயிற்சி ஆசிரியர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஈ) இவற்றிற்குச் சமமான அல்லது மேலான தராதரப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட தொழிலில் ஐந்து ஆண்டு செய்முறை அனுபவப் பத்திரம்.

**குறிப்பு.**—விண்ணப்பதாரர்கள், தொழிற் பரிசோதனையொன்றின் பின்னரும் போதித்தலிற் செய்முறைப் பரிசோதனையொன்றின் பின்னரும் தெரிவுசெய்யப்படுவர்.

7. இப்பொழுது அரசாங்க சேவையில் நியமனங்களையுடைய உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவரவர்களது பகுதிகளின் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். தொழிற் பகுதியில் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, விண்ணப்பதாரர்களை சேவையினின்றும் விடுவிக்கச் சம்மதிப்பதாகப் பகுதித் தலைவர்கள் கூறுமிடத்து மட்டுமே அவ்விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.

8. பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பத்திரங்களல்ல) விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவத்தாட்சிப் பத்திரம் **(முக்கிய குறிப்பு.**—ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரம், அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிக்கோவையின் நோக்கத்திற்காக விநியோகிக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) (i) மிகவுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(ii) தொழில்நுட்பக் கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) சமீபத்திற் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் இப்பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை).

விண்ணப்பதாரர்கள் தங்கள் மூலப் பத்திரங்களை நேர்முகப் பரீட்சையிற் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் திகதியும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

ரீ. ஆர். ஆர். விஜேவிக்கிரமா,
தொழில் அதிபர்,

## விண்ணப்பப் பத்திரம்

### தொழிற் பகுதி, தொழின் முறைப்பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர் தானம்—பொதுமின்சாரவேலை/பொருத்துதல்

1. முழுப் பெயர் : ————.
(தெளிவாக எழுதப்பட வேண்டும்)

2. விலாசம் : ————.

3. வயது 30.9.1969 ல் : ————.

| | வருடம் | மாதம் | நாட்கள் |
|---|---|---|---|
| பிறந்த தேதி : | ———— | ———— | ———— |

4. பிறந்த இடம் :—
(அ) அபேட்சகரினது : ————.
(ஆ) அபேட்சகரின் தந்தையினது : ————.

5. எத்தேசத்தவர் ? : ————.

6. கல்வித் தராதரங்கள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

7. (அ) சிங்களத்தில் : ————.
(ஆ) தமிழில் : ————.
(இ) ஆங்கிலத்தில் : ————.
போதிப்பதற்குத் தகுதியுடையவரா ? : ————.

8. தொழில்நுட்பக் கல்வித் தராதரங்கள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

9. தொழில் அனுபவம் பற்றிய முழு விபரம் : ————.
(அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்குவோரின் பெயர்கள் : ————.

11. மற்றும் விபரங்கள் : ————.

————
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி : ————.

**குறிப்பு.**—பொருத்தமற்றவற்றை நீக்கி விடுக. (விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலினங்களுக்கு விண்ணப்பிப்பாராயின் அத்தகைய தொழிலொவ்வொன்றிற்கும் தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்.)

9—707/2—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872.

---

## இலங்கைத் தொண்டர் படை

### அரசாணை அமர்வுக்கு ஆளின்மை

இலங்கை தொண்டர் படையின் கீழ்க்காணும் கூறில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் பல்மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் கப்டன்களாக அரசாணை அமர்வுபெறக் காலிஸ்தானங்கள் உள்ளன.

### இலங்கை இராணுவ வைத்தியப் படை (தொண்டர்)

2. விண்ணப்பக்காரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 அக்டோபர் மாதம் 11 ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 40 வயதுக்குக் கூடாதவராயுமிருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை மருத்துவயவையில் மருத்துவ செய்கை பயிலுநராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) எல். டி. எஸ்., பி. டி. எஸ். பட்டதாரியாயிருத்தல் வேண்டும். அல்லது பிரசித்திபெற்ற சர்வகலாசாலையில் அல்லது பரீட்சை சபையினால் பெற்ற அதற்குக் கூடிய பல்மருத்துவக் கல்வித் தகைமையுடையவராயிருப்பதுடன் இலங்கை மருத்துவயவையில் பல் மருத்துவ சத்திரவைத்தியராய்ப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(உ) வேண்டப்படும் வைத்தியத்தகைமைகளுக்கு இணங்க இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஊ) கீழ்க்காணப்படும் சிறப்பியல்புகளில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அல்லது சிறப்பியலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(i) காதும் மூக்கும் தொண்டையும்
(ii) கண்
(iii) சிறுநீர் உறுப்புத் தொடர்பு
(iv) தோல் நோய்
(v) மேக நோய்
(vi) இருதயக்கூற்றியல்

**குறிப்பு.**—(1) 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழியதிகாரச் சட்டத்திற்கு அமைவாகவும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் இணங்கி நடக்க வேண்டப்படுவர்.

3. இயல்பான நேரங்களில் இலங்கைத் தொண்டர் படையின் உத்தியோகத்தர் ஒருவர் குறிக்கப்பட்ட பயிற்சி படை அணிவகுப்புகளுக்கும் வருடத்தில் 14 நாட்கள் கொண்ட பயிற்சிக்கு மட்டுக்கும் தோற்றுமாறு வேண்டப்படுவர்.

4. இலங்கை தொண்டர் படையின் ஒழுங்குகளுக்கு இணங்க தொண்டர் படையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு குறிக்கப்பட்ட ஊதியத்துக்காகத் தம்மால் செலவிடப்படும் செலவுகள் கொடுக்கப்படும்.

5. பொது நியதிகள் தரைப்படை அதிகாரச் சட்டத்தின் பிரகாரமும் இலங்கை தொண்டர் படையின் ஒழுங்கு விதிகளுக்கும் அமைந்ததாகும். ஒரு தொண்டர் திரட்டப்பட்ட நேரத்தில் அவரின் கடமை தரைப்படை அதிகாரச் சட்டத்தின் 357 ஆம் அத்தியாயம் 7 ஆம் 19 ஆம் பிரிவின் நியதியின் படியாகும். சேவைக்காக திரட்டப்பட்ட நேரங்களில் இலங்கை தொண்டர் படையின் அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் சகாயப்பணமும் நிரந்தரப் படையின் உத்தியோகத்தர்களுக்குப் போன்றது போலாகும்.

6. இக் காலி ஸ்தானங்கள் இலங்கை தொண்டர் படைக்கேயாகும். அன்றி நிரந்தரப் படைக்கல்ல என்றும் தெரிந்தெடுக்கப்படுவது நிரந்தர தொழில் அமைப்புக்கு அல்ல என்பதையும் வற்புறுத்தப்படுகிறது.

7. விண்ணப்பங்கள் குறைந்தபட்சம் இரு நற்சான்றுப்பத்திரங்களுடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும். அவை கடந்த இரண்டு வருடங்களுக்குள் தகுதிவாய்ந்தவர்களினால் கொடுக்கப்பட்டதும் விண்ணப்பகாரருக்கு நன்கு அறிமுகமுடையவர்களிடமிருந்து பெற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

8. கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களில் இருந்து மேற் கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களை தொடர்வுத் தேர்தல் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படும். இதன் பின் தேர்தல் சபை ஒன்றினால் நேர்முகப்பரீட்சை மூலம் கடைசித்தேர்தல் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்களுக்கு எழுத்து மூலம் திகதி, நேரம் என்பன அறிவிக்கப்படும். இத்தொடர்பில் ஏற்படும் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பகாரருக்கு அவைபற்றி அறிவிக்கப்படும்.

9. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்பவும், விண்ணப்பகாரர்களின் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்பட்டதுமாய இருத்தல் வேண்டும். அவை யாவும் இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் கிடைக்க அனுப்புதல வேண்டும். விண்ணப்பப் படிவத்திலும் அவற்றை அனுப்பும் உறையின் மேல் இடப் பகுதியிலும் "விண்ணப்பங்கள்—இதொ—அரசாணை அமர்வு" என எழுதப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ம் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன்னதாய் இராணுவத் தலைமை நிலையத்தில் சேர வேண்டும்.

**குறிப்பு.**—(1) விண்ணப்பங்களுடன் சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் மட்டும் இணைத்தனுப்புதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவங்கள் இத்தலைமை நிலயத்தில் வழங்கப்படமாட்டாது.

(3) இவ்விளம்பரத்தில் தேவைப்படுபவற்றிற்கு இணங்காத விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப்படும்.

(4) ஏற்கனவே அரசாங்கத்தில் ஊழியம் செய்யும் உத்தியோகத்தர்கள் தம் விண்ணப்பங்களை சுகாதார சேவைத் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர், மேஜர் ஜெனரால்,
இராணுவத் தளபதிக்காக.

இராணுவத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,

1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 12 ம் திகதி.

## இலங்கை தொண்டர் படையில் அரசாணை அமர்வுக்கான விண்ணபபம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. தபால் முகவரி :————.

3. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் :————.

4. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் :————.

5. பிறந்த திகதி :————. வயது :————.
(பிறப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்று இணைத்திருத்தல் வேண்டும்.)

6. தேசிய இனம் :————.

7. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருப்பின், பிரிவு, தகுதிகள் ஆகியவற்றின் முழு விபரங்களைத் தருக :————.

8. இராணுவத்தில் இருந்து விலகிய பொழுது அல்லது விலக்கப்பட்ட பொழுது உமது நடத்தை :————.
(விலகிய அல்லது விலக்கப்பட்ட போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.)

9. சித்தியடைந்துள்ள பரீட்சைகளும் பாடங்களும் :————.
(கல்வித் தகைமைகளைக் குறிக்கும் சான்றுப் பத்திரங்களின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

10. உயரம் :————. அடி :————. அங்குலம் :————.

11. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.

12. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற விளையாட்டுகள் சம்பந்தப்பட்ட தனிச் சிறப்புகள் :————.

13. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.

14. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :————.
சர்வகலாசாலை நடை :————.
பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் :————.
சேர்ந்த திகதி :————.
விலகிய திகதி :————.
சித்தியடைந்துள்ள பொதுப் பரீட்சைகள் :————.

15. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைக் கீழே தருக :————.

| தற்போது வேலை கொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவை செய்த காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

(தொண்டர் படையில் சேருவதற்கு தாம் தொழில் செய்யும் இடத்தின் வேலை கொள்வோரின் சம்மதத்தைத் தெரிவிக்கும் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்.)

16. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும், முகவரிகளும் :————.
(நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்).

17. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி :————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

9–727/1.—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## இலங்கைத் தொண்டர் படை

### அரசாணை அமர்வுக்கு ஆளின்மை

இலங்கைத் தொண்டர் படையின் கீழ்க்காணும் கூறுகளில் இரண்டாவது லெப்டினன்ட் ஆக அரசாணை அமர்வுபெற வெற்றிடங்கள் இருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 2 வது (தொண்டர்) படை, இலங்கை காலாற் படை | — | கொழும்பு |
| 2 வது (தொண்டர்) படை, இலங்கை சிங்க படை | — | கண்டி |
| 2 வது (தொண்டர்) படை, கெமுனுப் படை | — | காலி |
| 3 வது (தொண்டர்) படை, கெமுனுப் படை | — | மாத்தறை |

2. தொண்டர் படையில் அரசாணை அமர்வுபெற விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 அக்டோபர் 11 ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 25 வயதுக்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) இராணுவத் தளபதியினால் விதிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதனையில சித்தியடைதல வேண்டும்.

(ஈ) பொ. த. ப. (சாதாரணம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்குக் கூடாத முறையில் (அல்லது சி. பா. த. ப. பரீட்சையில்) அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) மேலே கூறப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஏற்கனவே தொண்டர் படையில் இருக்கும் போர்வீரர்கள், தமது ஏவல் உத்தியோகத்தர் விதந்துரைப்பின் அவரவர்களின் விண்ணப்பங்களைச் சமர்பிக்கலாம்.

(2) 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்கத்தின் மொழியதிகாரச் சட்டத்துக்கு இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்.

3. இயல்பான நேரங்களில் இலங்கை தொண்டர் படையில் ஒரு உத்தியோகத்தர் குறிக்கப்பட்ட பயிற்சிப் படை அணிவகுப்புகளுக்கும் வருடத்தில் 14 நாட்கள் கொண்ட பயிற்சிக்கு மடகுக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவர்.

4. இலங்கை தொண்டர் படையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கை தொண்டர் படையின் ஒரு உத்தியோகத்தர் குறிக்கப்பட்ட ஊதியத்துக்காகத் தம்மால் செலவிடப்பட்ட செலவுகள் கொடுக்கப்படும்.

5. பொதுச் சேவை நியதிகள் தரைப்படை அதிகாரச் சட்டத்தின் பிரகாரமும் இலங்கை தொண்டர் படையின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்ததாகும். ஒரு தொண்டர் திரட்டப்பட்ட நேரங்களில் அவரின் கடமை தரைப்படை அதிகாரச் சட்டத்தின் (357 ம் அத்தியாயம்) 7 ம் 19 ம் பிரிவின் நியதியின் படியாகும். சேவைக்காக திரட்டப்பட்ட நேரங்களில் இலங்கை தொண்டர் படையின் அங்கத்தவர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் சகாயப்பணமும் நிரந்தரப் படையின் உத்தியோகத்தருக்குப் போன்றதாகும்.

6. இக்காலிஸ்தானங்கள் இலங்கை தொண்டர் படைக்கேயாகும். அன்றி நிரந்தரப் படைக்கல்ல என்றும் தெரிந்தெடுக்கப்படுவது நிரந்தர தொழில் அமைப்புக்கு அல்ல என்பதையும் வற்புறுத்தப்படுகிறது.

7. விண்ணப்பங்கள் குறைந்தபட்சம் இரு நற்சான்றுப்பத்திரங்களுடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும். அவை கடந்த இரண்டு வருடங்களுக்குள் தகுதிவாய்ந்தவர்களால் கொடுக்கப்பட்டனவாகவும் விண்ணப்பக்காரருக்கு நன்கு அறிமுகமுடையவர்களிடமிருந்து பெற்றனவையாகவும் இருத்தல் வேண்டும்.

8. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் இருந்து மேல்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களை தொடர்வுத் தேர்தல் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படும். இதன்பின் பாதுகாப்பு அமைச்சினால் ஆக்கப்பட்ட தேர்தல் சபையொன்றினால் நேர்முகப்பரீட்சை மூலம் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரருக்கு அவ்வாறானவை பற்றி திகதி, இடம், நேரம் என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவுகளோ அல்லது பிறசெலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பகாரருக்கு அவ்வாறானவை பற்றி அறிவிக்கப்படும்.

9. அரசாணை அமர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் ஒருவருட காலம் தகுதிகாண்காலச் சேவையில் அமர்த்தப்படுவர்.

10. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்பவும் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டதாயும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்திலும் அவற்றை அனுப்பும் உறையின் மேல் இடப்பகுதியிலும் "விண்ணப்பங்கள்–இதொப–அரசாணை அமர்வு" என எழுதப்பட்டு 1969.10.11 ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாய் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் சேர அனுப்பப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) விண்ணப்பங்களுடன் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மட்டும் (மூலப்பிரதிகள் அல்ல) அனுப்பப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவங்கள் இத்தலைமை நிலையத்தில் வழங்கப்பட மாட்டாது.

(3) இவ்விளம்பரத்தில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப்படும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர், மேஜர் ஜெனரல்,
இராணுவத் தளபதிக்காக.

இராணுவத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு.
1969 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 12 ம் திகதி.

**இலங்கை தொண்டர் படையில் அரசாணை அமர்வுக்கு விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
2. முகவரி :————.
3. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் :————.
4. அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையம் :————.
5. பிறந்த திகதி :————. வயது :————.
(பிறப்புச் சான்றுப்பத்திரத்தின் பிரதியொன்று இணைத்திருத்தல் வேண்டும்).
6. தேசிய இனம் :————.
7. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருப்பின், பிரிவு, தகுதிகள் ஆகியவற்றை விபரங்களுடன் தருக :————.
8. இராணுவத்தில் இருந்து விலகிய அல்லது விலக்கப்பட்ட பொழுது உமது நடத்தை :————.
(விலகும்போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
9. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித் தராதரம், பாடங்களும் திகதியும் குறிப்பிடுக :————.
(சான்றுப்பத்திரங்களின் பிரதி இணைத்தல் வேண்டும்)
10. உயரம் : அடி :————. அங்குலம் :————.
11. நீர் விவாகமானவரா, அல்லது விவாகமாகாதவரா :————.
12. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற் பயிற்சி விளையாட்டுகளில் உமக்குரிய தனிச் சிறப்புகள் :————.
13. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.
14. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :—
பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் :————.
சேர்ந்த திகதி :————.
விலகிய திகதி :————.
சித்தியடைந்துள்ள பொதுப் பரீட்சைகள் :————.
15. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டுவிலகியபின் செய்த தொழில் விபரங்களை கீழே தருக :—

| வேலைகொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவைசெய்த காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

(தொண்டர் படையில் சேருவது சம்பந்தமாகத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் தற்போதைய் தொழில் கொள்வோரின் கடிதம் ஒன்று இணைத்திருத்தல் வேண்டும்.)

16. குணச்சான்றிதழ்கள் வழங்கியோரின் பெயர்களும் முகரியும் :—
(1) ————.
(2) ————.
(சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் இணைத்திருத்தல் வேண்டும்)
17. விண்ணப்பகாரர் கையொப்பம் இட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி :————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

9—727/2.—19.9.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,872

---

இல. வெ.மு/4/78

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஐக்கிய இராச்சியத்தில் 1970/71 ஆம் ஆண்டு செல்லுபடியான பொதுநலவரசு ஆசிரிய பயிற்சிக் கல்வித் துணைப்பணங்கள்

பொதுநலவரசு ஆசிரிய பயிற்சிக் கல்வித் துணைப்பணத் திட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படுவனவும் பிரித்தானியாவிலுள்ள ஆசிரிய பயிற்சி நிலையங்களில் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் செல்லுபடியானவையுமான கல்வித் துணைப்பணங்களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் துறைகளிலான பயிற்சிக்கு இக்கல்வித் துணைப்பணங்கள் அளிக்கப்படும் :—

(அ) ஆசிரிய கற்பிப்போர்க்கான பயிற்சி நெறிகள்.

(ஆ) தொழில்நுட்ப ஆசிரிய கற்பிப்போர்க்கான பயிற்சி நெறிகள்.

(இ) பாடவிதான அபிவிருத்திப் பயிற்சி நெறிகள்.

(ஈ) உயர்தர மட்ட வகுப்புகளில் விஞ்ஞானமும் கணிதமும் கற்பித்தல்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இக் கல்வித் துணைப்பணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.**—கல்வித் துணைப்பணத்தால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ்வரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை.**—கல்வித் துணைப்பணங்கள் சாதாரணமாக ஒரு கழகவாண்டு அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடைந்த தவறுதல் போன்று காரணங்களையிட்டு பிரித்தானிய அதிகாரிகள் தற்றுணிபுக்கேற்ப கல்வித் துணைப் பணங்கள் கல்வித்துணைப் பணம் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திருப்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன்**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.10.1970 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையவையுமான நியமனங்களை வகிப்பவர்களாகவும் நியமனங்களில் உறுதிப் படுத்தப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(iv) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ;

(v) வெளிநாடுகளில் இதற்குமுன் புலமைப் பரிசிலேனும் பயிற்சியேனும் பெற்றிருக்கலாகாது ;

(vi) (அ) ஆசிரிய கற்பிப்போர்க்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவராயின், மேற்போந்த (i) தொடக்கம் (v)வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் கீழ்க்காணும் தரங்களில் எதிலேனும் அடங்க வேண்டும் :

(1) 4.10.69 அளவில் கலாசாலை ஒன்றில் குறைந்த பட்சம் ஒரு வருட சேவை பூர்த்தி செய்த ஆசிரியர் கலாசாலை அதிபர்கள்.

(2) 4.10.69 அளவில் ஆசிரியர் கலாசாலை ஒன்றில் குறைந்த பட்சம் ஒரு வருட சேவை புரிந்தவர்களும் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி ஆசிரியர்களாக/விரிவுரையாளர்களாகவுமுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரிகள், பட்டதாரிகள் அல்லது உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

(ஆ) தொழில் நுட்ப ஆசிரியர் கற்பிப்போர்க்கான் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவராயின், மேற்போந்த (i) தொடக்கம் (v) வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் 4.10.69 அளவில் கனிட்ட தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருட

சேவை புரிந்த கனிட்ட தொழில்நுட்ப நிலைய சிரேட்ட போதனாசிரியர்களாக அல்லது போதனாசிரியர்களாக இருக்க வேண்டும்.

(இ) பாடவிதான அபிவிருத்திப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவராயின், மேற்போந்த (i) தொடக்கம் (v) வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள் தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் கல்வி, காலச்சார அலுவல்கள் அமைச்சின் பாடவிதான அபிவிருத்திப் பிரிவில் தற்போது கடமையாற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாய் இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தர மட்ட வகுப்புகளில் விஞ்ஞானமும் கணிதமும் கற்பித்தல் தொடர்பில் விண்ணப்பிப்பவராயின் மேற்போந்த (i) தொடக்கம் (v) வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன், அப்பாடத்தை உயர்தர வகுப்புகளில் கற்பிப்பதில் 4.10.69 வரை குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட விஞ்ஞான பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—அரசாங்கத்தின் கீழ் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்திசெய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.70 அளவில் நிரைவேற்றியிருந்தாலன்றி விண்ணப்பிக்கலாகாது.

4. **அளிப்பு நிபந்தனைகள் .**—இக்கல்வித் துணைப்பணங்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரித்தானியாவுக்குப் போய்வர விமான மூலச் சிக்கன வகுப்புப் பிரயாணச் செலவு.

(ஆ) தாபரிப்புக்கான ஒரு கொடை.

(இ) சகல கற்கைச் செலவுகளும்.

(ஈ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்குமென £ 35 கொடை.

(உ) குளிர்தாங்கும் உடைகளுக்கென £50 கொடை.

**குறிப்பு.**—இக்கல்வித் துணைப்பணங்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிகப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிணப்புச் சாட்சிப் பத்திரம். தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவுசெய்யப்படும் இபேட்சகர்கள், ஐக்கிய இராட்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து கல்வித் துணைப்பணத்தின் முழுச்செலவையும் (அதாவது கல்வித் துணைப்பணம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராட்சியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கு உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை எற்றுக்கொள்ளுதல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்ப வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்தாரிகள் கல்வி காலச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர் தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 11 ந் வ.

9-656—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## காலி மாவட்டத்தில் கொஸ்கொட பிரிவிற்கு பிறப்பு இறப்பும் வெந்தர வலல்லாவிட்டி கோறளை பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கொஸ்கொட பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கிறவர்கள், **அல்லது** பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு, 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
காலி,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 19 ந் வ.

பீ. ஏ. ரீ. குணசிங்க,
மாவட்டப் பதிவாளர்.

9-499—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## தகவல் பகுதி

### நூலகப் பொறுப்பாளர் பதவி

தகவற் பகுதியினது அரசாங்கப் பிரசுரப் பணியகத்தின் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் விண்ணப்பங்கள் எழுதப்பெற்று "தகவல் அதிபர், 7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 1" என்ற முகவரிக்கு 1969, ஒக்டோபர் 4 ந் திகதிக்குப் பிந்தாது பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவங்கள் வழங்கப்படமாட்டா. கடித உறையின் மேல் இடது கோடி மூலையில் "நூலகப் பொறுப்பாளர்" எனத் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள விகிதம் ரூ. 1,320—19 × 72—ரூ. 2,688 (ரூ. 1,608 க்கும் ரூ. 2,184 க்கும் முன்னர் திறமைகாண் தடைகள் இருக்கும்).

3. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளமுடையதுமாகும். நியமனம் முதல் மூன்று வருடத்துக்கும் தகுதிகாண் அடிப்படையிலானதாகும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) 1969, ஒக்டோபர் 4 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

(ஆ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சை ஒன்றில் அல்லது அதிலும் உயர்வான பரீட்சை எதிலும் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

(இ) நூலகப் பணியில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராய் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்கள் கல்வித் தராதரமில்லாத மற்றைய தகைமைகள் பெற்றிருப்பின் விண்ணப்பிக்கலாம்.

5. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(i) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(ii) அபேட்சகரது தராதரங்கள், குணம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்குள்ள திறமையும் தகுதியும் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அண்மைக்கால சான்றுக் கடிதங்கள் இரண்டும் (இந்த உப பிரிவின் கீழ், ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள அபேட்சகர்கள் சான்றுக் கடிதங்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை),

(iii) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

**முக்கிய குறிப்பு.**—சான்றிதழ்களது அல்லது சான்றுக் கடிதங்களது பிரதிகள் அபேட்சகர்களுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டா. அபேட்சகர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால், அப்போது தான் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ள தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி, அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய கடிதங்களும் தகவல் அதிபருக்கே விலாசமிடப்பட்டு அனுப்பப்படவேண்டும். எக்காரணத்தைமிட்டும் இப்பகுதியில் உள்ள எந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

எஸ். எல். பி. அமுனுகம,
தகவல் அதிபர்.

தகவல் பகுதி,
இல.7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 7 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### நூலகப் பொறுப்பாளர் பதவி

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.

(அ) முதற் பெயர் :————.

(ஆ) இதர பெயர்கள் :————.

2. நிரந்தர தபால் விலாசம் :————.

3. உத்தியோகம் பார்க்கும் இடத்தின் விலாசம் :————.

4. (அ) 1969, ஒக்டோபர் 4 இல் சரியான வயது—
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் : ————.

(ஆ) பிறந்த திகதி :————.

5. சாதியம்—

(i) வம்சாவளி காரணமாகவா அல்லது பதிவு காரண்மாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக :————.

(ii) வம்சாவளி இலங்கைப் பிரஜை எனின் பின்வருவோர் பிறந்த இடத்தைக் குறிப்பிடுக—
விண்ணப்பிப்பவர் :————.
விண்ணப்பிப்பவரின் தந்தை :————.
விண்ணப்பிப்பவரது தந்தைவழிப்பாட்டன் :————.
விண்ணப்பிப்பவரது தந்தைவழிப்பூட்டன் :————.

6. கல்வித் தகைமைகள் (4 ஆவது பந்தியின் "ஆ" பிரிவின்படி சான்றிதழ்களின் பிரதிகள்) :————.

7. 4 ஆவது பந்தியின் "இ" பிரிவின்படி அனுபவம் பற்றிய விபரம் : ————.

8. நற்சாட்சிப் பத்திரம் வழங்கியவர்களது பெயர்களும் விலாசங்களும் :————.

9. முன்னைநாட் படைவீரருக்கு வழங்கப்பட்டுள்ள சலுகை பயன்படுத்தப் பட்டுள்ளதா? :————.

10. எப்போதாவது அரசினர் சேவையில் இருந்ததுண்டா? ஆம் எனின் எப்போது எங்கு என்ற விபரங்களைத் தருக. (ஒவ்வொரு பகுதியிலும் ஆற்றிய சேவைக் காலத்தைக் குறிப்பிடுக) :————.

————,
விண்ணப்பிப்பவரின் ஒப்பம்.

திகதி :————.

9—569—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872.

## கடற்றெழில் திணைக்களம்

### கடல் பொறியியல் உதவியாளர் பதவிகள்

கொழும்பு, கடற்றெழில் திணைக்களத்தில் கடல் பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு 1969.10.5 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எம்மை வந்தடையுமாறு அனுப்பப்படவேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்கான சம்பளத் திட்டம் வருமாறு :— ரூபா 2,580 (ஈராண்டு, பயிற்சியின் போது) பயிற்சியைச் சித்தியுடன் முடிவுறுத்தியபின் ஆண்டுக்கு ரூபா 3,300—120 உம் 180 உம்—ரூபா 5,340 வரை வழங்கப்படும்.

3. **நியமன நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். நியமனம் முதல் 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் பின்வருந் தகைமைகளுடையவரென்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) 1969.10.5 இல் 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளோரை வயதெல்லைகள் பிணியா).

(2) (அ) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் பொறிமுறை பொறியியல், நாள்த் தகுதித்தேர்வுப் பத்திரமுடையவராக ; அல்லது

(ஆ) (1) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழினுட்ப உத்தியோகத்தர்கள் சான்றிழையும் அல்லது கல்லோயா அபிவிருத்திச் சபையின் தொழினுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பொறிமுறை பொறியியல் தகுதித் தேர்வுப் பத்திரத்தையும் அல்லது அதை யொத்த தகைமைகளையும்,—

(2) அத்தகைய சான்றிதழையோ தகுதித் தேர்வுப் பத்திரத்தையோ பெற்றபின், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 5 ஆண்டுகள் செய்முறை அனுபவத்தையும் பெற்றவராய்; அல்லது

(இ) பொறிமுறைப் பொறியியல் மாலைப் பொறியியல் தொழிற் சான்றிதழுடன் (எம். ஈ. 111), அங்கீகரிக்கப்பட்டதொரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 10 ஆண்டு செயல் முறை அனுபவம் பெற்றவராய் அல்லது லண்டன் சிட்டி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் இயைபுள்ள தொழினுட்பவியல் சான்றிதழ்கள் போன்ற அத்தகைய தகைமைகள் பெற்று, அங்கீகரிக்கப்பட்டதொரு, பொறியியல் தொழில் பொறிக்களத்தில் 10 ஆண்டு செய்முறை அனுபவம் பெற்றவராய்; அல்லது

(ஈ) எஸ். எஸ். சீ. அல்லது அதையொத்த அல்லது அதினும் மேம்பட்ட சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியல் தொழில் பொறிக்களத்தில் போர்மன் போன்ற மேற்பார்வைப் பதவியில் 8 ஆண்டுகளுடன் தொழிற்பயிற்சியையும் உள்ளடக்குவதாக 15 ஆண்டு அனுபவம் உடையவராய் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் தத்தம் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைக்க வேண்டும் :—

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதம் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது).

(2) கல்வி, ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(3) அண்மையில் பெற்ற 3 குணச் சான்றிதழ்கள்.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், கடற்றெழில் இயக்குநர் என்று பதவி குறித்தனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வார்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்கவும்.

ஐ. ஓ. கே. ஜீ. பர்னுந்து,
பதில் கடற்றெழில் இயக்குநர்

த. பெ. எண். 531,
கடற்றெழில் திணைக்களம்,
கொழும்பு 3.

1969 ம் ஆடு செப்டம்பர் மீ 11 ந் வ.

### விண்ணப்பப் படிவம்

#### கடல் பொறியியல் உதவியாளர் பதவி

1. முழுப்பெயர் : ————.
   முதற்பெயர் : ————.
   வேறு பெயர்கள் : ————.
2. அஞ்சல் முகவரி : ————.
3. இனம் : ————.
4. 1969.10.5 ந் தேதியன்று வயது : ————.
5. பிறந்த தேதி : ————.
   (பிறப்புச் சான்றிதழ்ப் பிரதி இணைக்கப்பட வேண்டும்).
6. பிறந்த இடம் : ————.
   (1) விண்ணப்பதாரர் : ————.
   (2) விண்ணப்பதாரரின் தந்தை : ————.
   (3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் : ————.
   (4) விண்ணப்பதாரரின் தந்தைவழிக் கொப்பாட்டன் : ————.
7. மணமானவரா அல்லது தனியாளரா ? ————.
8. கல்வித் தகைமைகள், சித்தியுற்ற பொதுத் தேர்வுகளின் தேதிகளும், இறுதியாகத் தோற்றிய பொதுத் தேர்வில் எடுத்த பாடங்களும் : ————.
   (சித்தியடைந்த மிக உயர்ந்த தேர்வுச் சான்றிதழின்)பிரதி இணைக்கப்படவேண்டும்.
9. அறிவிப்பின் பந்தி 4(2) இல் குறித்துள்ள தகைமைகளில் எதை நீர் கொண்டுள்ளீர் ? உமது கூற்றை உறுதிப்படுத்தற்குப் பிரதிகள் இணைக்கவும் : ————.
10. தொழினுட்ப அல்லது உயர் தொழிற்றகைமைகள், தேர்வின், அல்லது பயிற்சி முடிவின் தேதிகளுடன் : ————.
11. கல்வி முடிவுற்றபின் செய்த தொழில், தேதிகளுடனும், விபரங்களைத்துடனும் : ————.
12. தற்போதைய தொழிலும், சம்பளமும் : ————.
13. குணச் சான்றிதழ்கள் வழங்காதவர்களும், விண்ணப்பதாரரை நேரடியாக அறிந்தவர்களுமான இரு நடுவர்களின் பெயர்களும், பதவிகளும், முகவரிகளும் : ————.
14. குணச் சான்றிதழ்கள் வழங்கியவர்களது பெயர்களும், பதவிகளும், (அச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.
15. யுத்த சேவைக்காலம், இருப்பின் : ————.
16. ஏதாவது சிறப்புக் கோரிக்கைகள் : ————.

————,
கையொப்பம்.

தேதி : ————.
கடற்றெழில் இயக்குநருக்கு,
த. பெ. எண். 531,
கொழும்பு 3.

9-696—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## கனிட்ட தொழில்நுட்ப நிலையம், இரத்மலானை

### புற விரிவுரையாளர் பதவிகள், 1969–70 ஆம் ஆண்டு

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் புறவிரிவுரையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இரத்மலானை, கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபருக்கு 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

2. இரத்மலானை, கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் புறவிரிவுரையாளர் பதவிகளுக்குக் காலியிடங்கள் உள்ள பாடங்கள் கீழே கொடுபட்டுள்ளன :—

(1) ஆங்கிலம்
(2) அடிப்படை ஆங்கிலம் } சிங்கள மொழிமூலம்
(3) வியாபாரக் கணிப்புகள் }

3. புறவிரிவுரையாளர்க்கு வழங்கப்படக்கூடிய கட்டணம், அவர்களுடைய தகைமைகளுக்கும்/அனுபவத்துக்கும் அவர்கள் படிப்பிக்க வேண்டப்படும் வகுப்புகளுக்கும் ஏற்ப ரூ. 5/ தொடக்கம் ரூ. 15/– வரை மாறுபடும்.

4. நியமனம் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகி அடுத்த வருடம் ஓகஸ்ற் மாதம் முடிவடையும் காலத்துக்கானதாகும். அவசியமெனின் ஒருவரின் சேவை முன்னரே நிறுத்தப்படலாம்.

5. வகுப்புகள் மு. ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணிவரை நடைபெறும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களின்போது கற்பிக்கக்கூடியவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே சீர்தூக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களில் தமக்கு வசதியான நேரத்தைக் குறிப்பிட வேண்டும்.

6. புறவிரிவுரையாளர்கள் தமது வகுப்புகளிலுள்ள மாணவர்களை மேலதிக வேதனமில்லாமல் பரீட்சிக்க வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபரால் பெற்றுக்கொள்ளப்படாத அத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமதத்துக்குத் தகுந்த காரணம் காட்டப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. விண்ணப்பம் என்ன பாடம் தொடர்பில் செய்யப்படுகிறதென விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் மிக முக்கியமெனக் கவனிக்கவும்.

வித்தியாதிபதி,
(மேற்குப் பிரதேசம்).

கல்வி அலுவலகம்,
கிறீன் பாத்,
கொழும்பு 7.

9–528—19.9.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## மன்னார் மாவட்டத்தில் பெரிய புள்ளச்சிபொற்கேணி பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

பெரிய புள்ளச்சிபொற்கேணி பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்களும், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிசபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக்கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மன்னார்.
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 2 ந உ.

9–500—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## சிலாபம் மாவட்டத்தில் ஓதரபலாத்த பிரிவிற்கு பிறப்பு, இறப்பும், பிற்றிகல் கோறளை தெற்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

ஓதர பலாத்த பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்தீ இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு, 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எம். டபிள்யூ. எஸ். குணரத்ன,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
புத்தளம்,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 7 ந உ.

9–562—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## அநுராதபுர மாவட்டத்தில் மஹாவிலாச்சிய பிரிவிற்கு பிறப்பு இறப்பும் நுவரகம்பளாத்தா பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

மஹாவிலாச்சிய பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப் படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும்,

தபால் அலுவலகங்களினும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களினும் பிரசித்தமான வியாபார நிலயங்களினும், கூட்டுறவுத்தாபன நிலையங்களினும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களினும் காரியாலயங்களினும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஐவன் சமரவிக்கிரம,
மாவட்ட பதிவாளர்.

அநுராதபுர மாவட்ட பதிவுகாரர் காரியாலயம்,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ம் திகதி.
9–638—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## நில அளவைத் திணைக்களம்

### இயந்திரத் தொழில் பயில்வோர் பதவிகள்

நில அளவைத் திணைக்களத்தில் இயற்திரத் தொழில் பயில்வோர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தை நிரப்பி 1969.10.5 ந் திகதி அல்லது அதற்கு முன்பு நில அளவையாளர்நாயகம், (நிருவாகக் கிளை) க்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் சம்பளமும்**

1 ம் வருடம் ஒருநாளுக்கு ரூபா 1.20
2 ம் வருடம் ஒருநாளுக்கு ரூபா 1.36
3 ம் வருடம் ஒருநாளுக்கு ரூபா 1.52
4 ம் வருடம் ஒருநாளுக்கு ரூபா 1.76
5 ம் வருடம் ஒருநாளுக்கு ரூபா 2.00

பயிற்சியில் சித்தியடைந்தவர்கள் நில அளவைத் திணைக்களம் தொழிலாளர் தரம் II க்கு நியமனம் செய்வதற்குத் தகுதியுடையவராவர். அப்படி நியமனம் பெற்றவர்கள் கீழே குறிப்பிட்டிருக்கும் தகுதியான சம்பள விகிதத்தில் அமர்த்தப்படுவர் :—

| | |
|---|---|
| (அ) கொழும்பில் அல்லது திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட எஞ்ஜினியரின் தொழிற்சாலையில் வேலை பார்க்கும்பொழுது | நாள் ஒன்றுக்கு ரூபா 2.50 விகிதம் முதல் ஆறு மாதம் ரூபா 750—42—1,296—— அதன் பின். |
| (ஆ) கொழும்பில் அல்லாததும் திறைசேரியால் அங்கீகரிக்கப்படாததுமாகிய எஞ்ஜினியரின் தொழில் நிறுவனத்தில் வேலை செய்யும் காலத்தில்— | நாள் ஒன்றுக்கு ரூபா 2.10 (ஆறு மாதத்திற்கு) அதன் பின் ரூபா 750—42—1,086 |

2. **வயது.**—69.10.5 ந் திகதியில் 17 வயதுக்குக் குறையாதவர்களும் 21 வயதுக்கு மேற்படாதவர்களாயுமிருத்தல் வேண்டும். (இரண்டு வருட முழு நேரப் பயிற்சி) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் இரண்டு வருட முழு நேர பயிற்சி பெற்றவர்களின் வயது பயிற்சிக் காலத்தைத் தவிர்த்துக் கணக்கிடப்படும். இந்தத் திணைக்களத்தில் வேலைபார்ப்பவர்களுக்கு இந்த வயது பார்க்கப்பட மாட்டாது.

3. **கல்வித் தகைமைகள்.**—விண்ணப்பதாரர் கனிஷ்ட பாடசாலை பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

4. **சேர்க்கப்படும் முறைகள்.**—கீழ்க்காணும் தகைமை உடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

1. திணைக்களங்களில் வேலைபார்ப்பவர்கள், மேல் 3 ம் பகுதியில் குறிப்பிட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள். (அவர்கள் வேலைக் களப் பயிற்சி நெறி II (முழுநேர நாட்பயிற்சி) க்கான சான்றிதழை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து அல்லது அதற்குச் சமமான சான்றிதழை இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கனிஷ்ட தொழில் தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து பெற்றிருத்தல் வேண்டும்).

5. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்படுவோர் அலுவலகத்தில் உள்ள நானுவித தொழில்முறைப் பயிற்சிகளையும் 5 வருட காலத்தில் பயிலல் வேண்டும். 5 வருட காலத்திற்குப் பின், பயிற்றப்பட்ட துறையில் போதுமான அளவு அனுபவம் பெற்றிருந்தால், தொழிலாளர் தரம் IIல் உள்ள நியமனங்களும் உயர்வும் என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ள தன்படி தொழிலாளர் தரம் II க்கான வெற்றிடங்களை நிரப்புமுகமாக நியமிக்கப்படும் தர உயர்ச்சிநிலை, பொறியியல் அநுபவம், திணைக்கள வேலைத்திறன், நடத்தை ஆகியவற்றை கருத்திற்கொண்டே நியமனங்கள் செய்யப்படும். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் பயிற்சியைப் பூர்த்தி செய்யத் தவறினால் நீக்கப்படுவர். இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு 4 வருடங்கள் மட்டுமே பயிற்சி அளிக்கப்படும். இப்படி பயிற்றப்படுவோர் நியமனம்பெற்ற காலம் தொடக்கம் 2 வது வருட தொழில் பயில்வோர் சம்பள விகிதப்படி சம்பளம் பெறுவர். அவர்கள் 3 வருட முடிவில் தரம் II க்கான தொழில் முறைக்குரிய பரீட்சைக்குத் தோன்ற அனுமதிக்கப்படுவர். அதில் தேர்ச்சி பெற்றவர்கள் தரம் IIல் வெற்றிடங்கள் வரும்போது நியமிக்கப்படுவர். இந்தச் சோதனையில் சித்தியடையத் தவறியவர்கள் 4 வருட பயிற்சிக்காலம் முடிந்த பின்பே மீண்டும் தொழில் முறைக்குரிய உயர்ச்சிப் பரீட்சையில் தோன்ற அனுமதிக்கப்படுவர். பயிற்சிக்கால எல்லையை நீடித்தல் அவசியம் என்று கருதினால் மேலும் ஆகக்கூடிய 2 வருட காலத்திற்கு அதனை நீடிக்கும் அதிகாரம் நில அளவைநாயகத்திற்கு உண்டு.

6. **சேவை நிபந்தனைகள்.**—தொழில் பழகுவோராக தெரிவுசெய்யப்பட்டவர், அரசாங்க சேவை அதிகார சபையின் விதிகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்கள கட்டளைக்கு அல்லது பிரமாணங்களுக்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கும் அமைந்து நடத்தல் வேண்டும். பயிற்சி பெறும் அக்காலத்திலும் கடமையில் அசட்டை, துர்நடத்தை ஆகியன காணப்படின் பயிற்சியினின்றும் நீக்கப்படுவர்.

7. விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதி தவிர) மட்டும் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்;—

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ். (மூன்றும் பந்தியில் குறிப்பிட்ட தன் படிக்கு

(இ) இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களில் ஒன்று கிராம சேவையாளருடையதாக இருத்தல் வேண்டும்.

8. தற்பொழுது நில அளவைத் திணைக்களத்தில் வேலை பார்ப்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் கடமை ஆற்றும் மேலதிகாரியின் ஊடாக அனுப்ப வேண்டும்.

9. இவ்வரசாங்க வர்த்தமானியின் முதலாம் பகுதி இரண்டாம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையிலான பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகட்கும் கவனம் கோரப்படுகின்றது.

10. விண்ணப்பங்களும் இது சம்பந்தமான எந்தக் கடிதத் தொடர்பும் நில அளவை நாயகத்திற்கு மட்டும் அனுப்புதல் வேண்டும். இத்திணைக்களத்தில் கடமையாற்றும் வேறு எந்த உத்தியோகத்தர்களுக்கும் நேரடியாக அனுப்பக்கூடாது.

சீ. ரி. குணவர்த்தன,
நிலஅளவைநாயகம்.

நில அளவை அலுவலகம்,
கொழும்பு 5.
1969 ம் ஆண்டு புரட்டாதி மீ 9 ந உ.

### மாதிரிப் படிவம்

**இயந்திரத் தொழில் பயில்வோர் பதவி**
**நில அளவையாளர் திணைக்களம்**

1. முழுப் பெயர் :————.
   (அ) பெயர் :————.
   (ஆ) வேறு பெயர் :————.
2. தபால் விலாசம் :————.
3. பிறந்த திகதி—(1969.10.5 க்கு வயது,
   வருடம் :———— மாதம் :———— நாள் :————.
4. நாட்டினம் :————.
5. கல்வித் தகைமைகள் :————.
   (கூடுதலாகச் சித்தியடைந்த வகுப்பைக் குறிப்பிடுக)
6. நுண்கலைத் தகைமைகள் :————.
7. இப்பொழுது வேலை பார்ப்பவரா? :————.
   (அப்படியாயின் வேலைபார்க்கும் இடத்தின் விலாசம் குறிப்பிடுக)

இந்தப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் யாவும் முற்றிலும் உண்மையானவை என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடித்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்றும் நியமனத்தின் பின் கண்டுபிடித்தால் எதுவித ஈடுசெய்தல் இன்றி வேலையினின்றும் உடனடியாக நீக்கப்படுவேன் என்றும் அறிவேன்.

————.
திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9–570—19.9.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,872

### கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

**தலைமைப் பாதுகாப்புப் பணியார் பதவி**

பின்வருந் தகைமைகளையுடைய இலங்கை வாசிகளிடமிருந்து மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) பொலிஸ் இலாகாவில், குறைந்தது 10 வருட சேவையாவது செய்து, அதிற் கடைசி 5 வருடமாவது அரசிதழில் பதியப்பெற்ற (Gazetted Officer) பணியாளராகக் கடமை புரிந்திருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) ஆயுதந் தாங்கிய சேனைப்படைகளில், உரிமைபெற்ற (Commissioned Officers) பொலிஸ்/பாதுகாப்புத்துறையில் குறைந்தது 10 வருட அனுபவம் வாய்ந்திருத்தல் வேண்டும்.

**சம்பள விகிதம்.**—மாதமொன்றுக்கு ரூபா 1,250—50—ரூபா 1,500 (மொத்தமாக)

**சேமநலநிதி.**—ஊழியர் 10 சத வீதமும் ஸ்தாபனம் 15 சத வீதமுமாகக் கொடுக்கப்படும்.

அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தோ, அல்லது அரசாங்க கூட்டுறவு ஸ்தாபன ஊழியர்களிடமிருந்தோ வரும் விண்ணப்பங்கள் அன்னவர் திணைக்களத்தலைவர்கள் மூலமாக அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய விண்ணப்பதாரிகள் நியமனம் பெறுங்கால் அவர்களை சேவையிலிருந்து விலக அனுமதிப்பதாக அவர்களின் தலைவர்கள் இணைந்தாற்றான் பதவி நியமனஞ் செய்யப்படுவார்கள்.

பூரண விபரங்களடங்கிய விண்ணப்பங்கள் 26.9.69 ல் அன்றோ, அல்லது அதற்கு முன்போ, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன ஆட்கள் தொகுதி முகாமையாளர் இல. 21, வக்சால் வீதி, கொழும்பு-2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆட்கள் தொகுதி முகாமையாளர்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்,
21, வக்சால் வீதி,
கொழும்பு–2,
5.9.69.

9–705—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

**கொழும்பு உபபிரிவு**

கீழே சொல்லப்பட்ட வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவு பெரும்பாக பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வேலைக்கு நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக் காரரின் பதிவுத் தொகை ரூபா | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| கொழும்பு நீர்ப்பாசன உபபிரிவில் பண்டங்கள் ஏற்றிச் செல்லல், இறக்கல் .. | 15,000 .. | 25 |

3. இக்கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்களை கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன்வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திர மூலம் கேள்விக்காரர்களாக முன்வருவோர் வெற்றுப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் கட்ட வேண்டும், அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டைச் சமர்பித்தல் வேண்டும்.

மேற்படி வேலை பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உபபிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5.

9–653—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

### நீர்ப்பாசன இலாகா

**அம்பாறை உப-பிரிவு**

1969–70 நிதி வருடத்திற்கான அரசாங்கப் பொருட்களை மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து அம்பாறை உபபிரிவின் கீழ் உள்ள அம்பாறை, உகணை பண்டகசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கான (ஏற்றுவது–இறக்குவதுடன்) கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினுல் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. ரூபா 40,000 மோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ இத்திணைக்களத்தில் 'பதிந்துள்ள கொந்தருத்துக்காரர்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. கேள்விப்பத்திரங்கள் அம்பாறை அல்லது கல்முனை அல்லது செங்கலடி நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில், கடமை நேரங்களில் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்த வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமா என்பதை நிர்ணயிக்க ஏதுவாக இருக்கும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்காட்டிய நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவரின் அலுவலகத்திலோ, கச்சேரியிலோ கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டினுல் போதுமானது.

இக் கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவையும் கீழ்க் குறியிடும் நீர்ப்பாசன பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். சந்திரதாச,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அம்பாறை உபபிரிவு.

உப நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாறை,
6.9.1969.

9–675—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## கமத்தொழிற்றிணைக்களம்

**அரசாங்க கமத்தொழில் பண்ணைக்கு தண்ணீர்ப் பம்ப் ஒன்று விநியோகித்தல், பாரங்கொடுத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

மேற்கூறப்பட்ட வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ந் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. திருகோணமலை கமத்தொழிற் பண்ணைக்கு மேல்வரும் திட்டத்திற் கமைய மண்ணெண்ணெயால் இயங்கக் கூடிய 2 அங். தண்ணீர்ப் "பம்ப்" ஒன்று விநியோகித்தல், பாரம் கொடுத்தல்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்துள் உடனடி விற்பனைக்கு தமது கைவசமுள்ள இருப்பில் இருந்து விநியோகித்தல், பாரங்கொடுத்தல் வேண்டும்.

(அ) மண்ணெண்ணெயால் இயங்கக்கூடிய 2 அங். புதிய " தண்ணீர்ப் பம்ப் " " சக்சன் 2 அங். " டிலிறி 2 அங். (வெளியேற்றுதல்) ;

(ஆ) சக்சன் (தண்ணீர் இழுக்கும் சக்தி) 25 அடி ;

(இ) 50 அடி தலை (கெட்) மூலம் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்திற்கு 3,400 கலன் தண்ணீரை வெளியேற்றக்கூடியதாய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) தேவையான நேரத்தில் கழற்றிப் பூட்டக்கூடிய வசதியுடையதாய் "பூட்வால்வ், செம்பு (பிறுஸ்), கப்பிளின், தோல் (லெதர்) வாசர், ஹோஸ் ரையிட்னர், செம்பு நிப்பிள்" ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட 33 அடி நீள 2 அங். " அல்கத்தின் பைப் ".

மேற்கூறிய திட்டத்திற்கமைய புதிய தண்ணீர்ப் பம்பு கேள்விக்காரரால் விநியோகித்தல் வேண்டும். பம்பு இணைக்கப்பட்டு, பண்ணை அதிபரின் திருப்திக்கமைய வேலை செய்யத் தொடங்கியவுடன் பணம் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரத்துடன் பம்பின் விபரங்கள் அடங்கிய விளக்கத்தை இணைத்தல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள், சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு, சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால், யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர், யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன் தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, யோசனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித் தரமுடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ, குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழி கோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலை பார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரகாரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினல் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.க.வும் ப.)

பேராதனை.

9-571—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## தேசிய பொருட்காட்சியில் பொழுதுபோக்கு மைதானங்களை நடாத்துவதற்கான கூறுவிலைகள்

1969 டிசெம்பர் மாதம் தொடக்கம் 1970 ஆம் ஆண்டு முற்பகுதி வரை நடைபெறவிருக்கும் மாவட்டப் பொருட்காட்சிகளில் பொழுது போக்கு மைதானங்களை நிறுவி, கொண்டு நடாத்துவதற்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

இப்பொருட்காட்சிகள் பின்வரும் மாவட்டங்களில் நடைபெறும் :—

1. கேகாலை.
2. காலி.
3. குருநாகல்.
4. பொலன்னறுவை.
5. மட்டக்களப்பு.
6. பதுளை.
7. இரத்தினபுரி.

ஒரு பொருட்காட்சி முடிவடைந்தவுடன் அதிலிருந்து மற்றப் பொருட்காட்சி நடைபெறும் இடத்துக்குத் தனது பொருட்களைக் கொண்டு செல்லக் கேள்விப் பத்திரக்காரர் தயாராக இருத்தல் வேண்டும்.

சகல மாவட்டங்களுக்குமாகவோ அல்லது தனிப்பட்ட மாவட்டத்துக்காகவோ கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

தபால் உறையின் மேல் இடது மூலையில் கூறுவிலைகள் " பொழுது போக்கு மைதானங்களுக்கான கூறுவிலைகள் " என்று எழுதப்பெற்ற கூறுவிலைகள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 1969 ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்கொண்டும் விபரங்களையும் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தகவல் அதிபதி,

தகவல் பகுதி,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 7 ந் உ.

9-658/1—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## தேசிய பொருட்காட்சியில் மின்சார அமைப்புகளுக்கான கூறுவிலைகள்

கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி 1969 டிசெம்பர் மாதம் தொடக்கம் 1970 ஆம் ஆண்டு முற்பகுதி வரை நடைபெறவிருக்கும் மாவட்டப் பொருட்காட்சிகளில் ஒலிபரப்பு வசதிகளையும் மின்சார அமைப்புகளையும் நிறுவுதற்குப் பிரசித்திபெற்ற நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. ஒலிபரப்பு வசதிகளும், மின்சார அலங்காரங்களும், வெளிச்ச வசதிகளும் மொத்தம் 10 முல் 15 எக்கர் வரை வியாபித்து இருத்தல் வேண்டும்.

2. ஒன்றன் பின் ஒன்ருக சுமார் பத்து மாவட்ட நகரங்களில் பொருட்காட்சிகள் நடைபெறும். எனவே இப்பொருட்காட்சிகளுக்கிடையிலுள்ள குறுகிய காலத்தில் ஒலிபரப்பு வசதிகளையும் மின்சார அலங்கார வெளிச்சவசதிகளையும் பத்துப் பொருட்காட்சிகளிலும் கேள்விப்பத்திரக்காரர் பொருத்தத் தயாராக இருத்தல் வேண்டும். இதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்லுதல் கேள்விப் பத்திரக்காரரின் பொறுப்பாகும்.

3. தபால் உறையின் மேல் இடது மூலையில் " ஒலிபரப்பு வசதிகளை பொருத்துவதற்கான கூறுவிலை " என்று எழுதப்பெற்ற கூறுவிலைகள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 1969 ஒக்டோபர் 2 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. மேற்கொண்டும் விபரங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தகவல் அதிபதி.

தகவல் பகுதி,
7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை.
கொழும்பு 1.

9-658/2—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## பொருட்காட்சிக் கூடங்களுக்கான கூறுவிலைகள்

1969 டிசெம்பர் மாதம் தொடக்கம் 1970 ஆம் ஆண்டு முற்பகுதிவரை நடைபெறவிருக்கும் ஒரு தொகுப்பு மாவட்ட பொருட்காட்சிகளுக்கான முன்கூட்டி அமைக்கப்பெற்ற கூடங்களை நிறுவுதற்கும், பிரித்தற்கும், ஏற்றிச் செல்லுதற்கும், பிறிதோர் இடத்தில் நிறுவுதற்கும் முன்கூட்டி அமைக்கப்பெற்ற கூடங்களை நிறுவுவதில் அனுபவம் உள்ள பிரசித்திபெற்ற நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

பின்வரும் விவரக்கூற்றுக்களைக் குறித்துக் கொள்ளல் வேண்டும் :
அ. பொருட்காட்சிகள் பின்வரும் மாவட்டங்களில் நடைபெறவிருக்கின்றன :—

1. கேகாலை.
2. காலி.
3. குருநாகல்.
4. பொலன்னறுவை.
5. மட்டக்களப்பு.
6. பதுளை.
7. இரத்தினபுரி.

ஆ. கேள்விப் பத்திரக்காரர்கள் கூடங்களை நிறுவி, பிரித்து, வேறிடத்துக்கு ஏற்றிச் சென்று, நிரலில் அடுத்தபடியாகக் காட்டப்பட்டுள்ள மாவட்டத்தில் மீண்டும் அக்கூடங்களை நிறுவவேண்டும்.

இ. இக்கூடங்களை 3 மாவட்டங்களில் ஒரேநேரத்தில் நிறுவவும் வேண்டியிருக்கும். கூடங்களைப் பிரித்து, ஏற்றிச் சென்று மீண்டும் அமைத்தற்கு ஒவ்வொரு பொருட்காட்சிக்குமிடையில் அதிக காலமில்லாமையினலேயே இப்படிச் செய்யவேண்டியிருக்கும்.

ஈ. மூன்று கூறுகளுக்கு அல்லது ஒரு தனிக் கூற்றுக்குக் கேள்விப் பத்திரக்காரர்கள் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

உ. ஒவ்வொரு பொருட்காட்சி மைதானத்துக்குள்ளும் சுமார் 10 முதல் 15 எக்கர் வரையிலான மொத்த நிலப்பரப்பை அடக்குதற்கான முன் கூட்டியே அமைக்கப்பெற்ற கூடங்கள் ஒவ்வொரு பொருட்காட்சிக்கும் அல்லது ஒவ்வொருகூற்றுக்கும் தேவைப்படும். கூடம் ஒவ்வொன்றினதும் பரிமாணம் 20′ × 20′ ஆகவிருக்கும். கூறுவிலைகள் உண்மையிலேயே உபயோகிக்கப்படவிருக்கும் முன்கூட்டியே அமைக்கப்பெற்ற பொருட்களின் சதுர அடியின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

அமைப்புமுறை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வேறுபடும்.

" பொருட்காட்சிக் கூடங்களுக்கான கூறுவிலைகள் " என்று கடித உறையின் மேல் இடது மூலையில் எழுதப்பெற்ற கூறுவிலைகள் இதே ஒப்பமிட்டுள்ளவருக்கு 1969, ஒக்டோபர் மாதம் 2 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

மேற்கொண்டும் விபரங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தகவல் அதிபதி.

தகவல் பகுதி,
7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1.

9-658/3—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## இறப்பர் ஏற்றிச் செல்லகூறுவிலை விண்ணப்பங்கள்

1,10.69 ல் இருந்து 30.9.1970 காலவரை தாழ் இறப்பர் கட்டுகளும், தாழ் இறப்பரும் லொறியில் ஏற்றிச் செல்வதற்கு, பதிவு செய்யப்பட்ட ஏற்றிச் செல்லல் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கீழ்க்காணும் ஏற்றிச் செல்லும் சேவைகளுக்கு, கொழும்பு, தபால் பெட்டி 247, பொருட் கொள்வனவு அதிபரால் கூறுவிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் :

(i) மட்டக்குளி 346 பர்கூசன் வீதியிலுள்ள அரசாங்க மத்திய இறப்பர் சாலையிலிருந்து கப்பல் துறை மேடைக்கு தாழ் இறப்பர் கட்டுகள் ஏற்றிச் செல்வதற்கு ;

(ii) களனி அரசாங்க இறப்பர் சாலையிலிருந்து கப்பல் துறைமுக மேடைக்கு தாழ் இறப்பர் கட்டுகள் ஏற்றிச் செல்வதற்கு ;

(iii) களனி ஆரசாங்க இறப்பர் சாலையிலிருந்து மட்டக்குளி 346 பர்கூசன் வீதியிலுள்ள மத்திய இறப்பர் சாலைக்கு, தாழ் இறப்பரும் கழிவு இறப்பரும் ஏற்றிச் செல்வதற்கும்.

2. ஏற்றிச் செல்லல் சேவைகள் கப்பல் துறைமேட்டில் கப்பலில் ஏற்றுமதி செய்யும் காலங்களிலும், ஒரு அரசாங்க இறப்பர் சாலையிலிருந்து மற்றொரு இறப்பர் சாலைக்கு ஏற்றிச் செல்லும் காலங்களிலுமே தவிர ஒழுங்காகத் தேவைப்படமாட்டாது. இருந்தும் குறுகிய நேர அறிவித்தலில் தேவையான ஏற்றிச் செல்லல் சேவைகள் மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

3. கூறுவிலை விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் மேற் கூறிய (i) (ii) தேவைகளுக்கு, 250 ரு. எடையுள்ள ஒவ்வொரு இறப்பர் கட்டு ஏற்றிச் செல்வதற்கு உரிய விகிதமும், அதனுல் ஏற்படும் காலதாமதத்திற்குரிய விகிதம் கொண்டதும், (iii) தேவைகளுக்கு, ஒரு தொன் தாழ் இறப்பர் ஒரு மைல் தூரத்திற்கு ஏற்றிச் செல்வதற்குரிய விகிதமும் அதன் கால்தாமதத்திற்குரிய விகிதமும் அடங்கியதாக 1969 ம் ஆண்டு செப்தம்பர் மாசம் 26 ம் திகதி பி. ப. 3.00 மணிக்கு முன்னராக, பொருட் கொள்வனவு அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் மேற்பக்க இடதுகை மூலையில் "இறப்பர் ஏற்றிச் செல்வதற்கு கூறுவிலை விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

4. கொழும்பு 1, அவுஸ்திரேலியா கட்டடம் 4 வது மாடியிலுள்ள பொருட்கொள்வனவு அதிபரின் திணைக்களத்திலிருந்து இது சம்பந்தமான வேறு எதுவித விபரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஈ. ஏ. இராஜசிங்கம்,
பொருட் கொள்வனவு அதிபருக்காக,
கொழும்பு.

பொருட் கொள்வனவுத் திணைக்களம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 9 ந் உ.

9–649—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## உள்ளூர்க் கேள்வி

கொழும்பு 1, லோட்டஸ் ரோட், அ.த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகம், கேள்விச் சபை, தலைவர் அவர்களினுல் இரண்டு (2) வலது கைப்பக்கமாக ...ட்டப்படும், சாதாரண கட்டுப்பாடும், சாதாரண கனமுமுள்ள 30 அந்தர் ... உருளை (சிலிண்டர்) லொறி அடிச்சட்டங்களை வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விகள் 12.10.69 ம் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில், இரட்டைப் படிகளில் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் வேண்டும். அத்துடன் அவரது அலுவலகத்தில் கேள்விப் பத்திர சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.

1969–70 ஆம் நிதி வருடத்தின் முக்கால் வருடம் முடிவடையுமுன்னர் அதாவது 30.6.70 ஆம் திகதிக்கு முன்பாக மேற்கூறிய வாகனங்களை வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்கும், கேள்வி கேட்போர் திட்டவட்டமாக உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

கோட்டை, ம.த.அ. தந்திக் காசாளரிடமிருந்து அல்லது ஒரு அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடமிருந்து கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டை கேள்வி கேட்கவிரும்புவோர், கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, விண்ணப்பித்தால் அவர்களுக்கு, கேள்விப்பத்திரச் சாதனங்கள் 8.10.69 ஆம் திகதி பி. ப. 2 மணிவரை வழங்கப்படும்.

விவரக் கூற்றில் கேட்கப்பட்டுள்ளவாறு மேற்கூறப்பட்டுள்ள வாகனங்களுக்குத் தேவையான கருவிகளுக்கும், மாற்றுப்புகளுக்குமாக வேருகக் கூறுவிலைகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

வீ. அழகரத்தினம்,
பிரதான தந்தித் தொலைசெய்திப்
போக்குவரத்துப் பொறியியலாளர்.

பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்கு
வரத்துப் பொறியியலாளரின் அலுவலகம்,
அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம்,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1.

9–579—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872.

---

## இலங்கை வங்கி

நுவரெலியாவில் இலங்கை வங்கியின் கட்டடங்களை கட்டுவதற்காக, கேள்விப்பத்திரங்கள் அங்கீகாரம்பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

உரிமைக் கட்டடக்கலைஞர் திரு. பிரான்க் எஸ். பீரிஸ் அவர்களுக்கு தாங்கள் ரூபா. 300,000 அல்லது அதற்குமேல் பெறுமதியுள்ள கட்டடம் ஒன்றை கடந்த 2 ஆண்டுகளுக்குள் திருப்திகரமாக செய்துமுடித்தார்களென நற்சான்றுடைய ஒப்பந்தக்காரர், சான்றுமூலம் தங்கள் திறனை ஒப்புவிக்கவேண்டும். கட்டடக்கலைஞர் திருப்திகரமான நம்பிக்கையூட்டுவதற்குரிய ஆதாரச் சான்றுடைய ஒப்பந்தக்காரருக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்குவர்.

தனிக்குறிப்பீடுகள், அளவுக்குறியீடுகள் மற்றும் எல்லா வரைப்படங்களையும் காணிப்படங்களின் செலவு வகையில் ரூபா 100 யாகிய மீட்டுக் கொள்ளப்படாத கேள்விக் கட்டுப்பணத்திற்கு பெற்றுக்கொள்ளலாம்.

1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 24 ம் திகதி அலுவலக நேரங்களில் நண்பகல் 12 மணி வரைக்கும் உரிமைக் கட்டடக் கலைஞர் திரு. பிரான்க் எஸ். பீரிஸ் அவர்களிடமிருந்து 25 ஏ, மக்காதி ரோட், கொழும்பு 7 என்னும் முகவரியில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

முழுமொத்தத் தொகை அடிப்படையில் ஒப்பந்தம் தீர்ப்புச் செய்யப் படும்.

முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் "நுவரெலியாவில் இலங்கை வங்கிக் கிளைக் கட்டடத்திற்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்பட்டு, 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ம் திகதி நண்பகல் 12 மணியளவில் அல்லது அதற்கு முன், முகாமையாளர், நிலமனையிடங்கள் பகுதி, இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு என்னும் முகவரிக்கு சேரும்படியாக அனுப்பவேண்டும்.

முகாமையாளர்,
நிலமனையிடங்கள் பகுதி.

இலங்கை வங்கி,
மத்திய அலுவலகம்,
கொழும்பு.
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 6 ந் உ.

9–680—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## கேள்விப் பத்திர அறிவித்தல்

வாழைச்சேனையிலுள்ள, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 100 நீள் தொன் பிளீச்சிங் பவுடர் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் 3.12.69 பி. ப. 2.00 மணிக்கு முடிவடையும்.

கேள்விப் பத்திரப் படிவங்களும், மற்றும் ஏனைய விபரங்களும் பொறுப்பு முதல்வர்கள் அல்லது வழங்குபவர்களின் பெயர்களும் அத்துடன் விலாசங்களும் அடங்கிய விண்ணப்பமூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்.
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் இடம்,
கொழும்பு 2.
1969 ம் ஸ்ரீ ஓகத்து ௴ 30 ந உ.

9–659—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

## வீதிகள் அமைத்தல்—மன்னூர் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வீதிகள் அமைப்பதற்காய கேள்விப் பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினுல் 1969 ஆம் ஆண்டு செப்றம்பர் மாதம் 24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னூர்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 ம் பீ. ஓ. பீ. பாதை பெரியமடு.

2. மன்னூர்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னூர் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை.

3. ஒவ்வொரு விடயத்திற்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னூர்க் கச்சேரியில் தலா ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

4. கேள்விப்பத்திரங்கள் மன்னூர்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் “ அரசாங்க அதிபர், மன்னூர் ” என்று விலாசமிட்டு 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி (24.9.69) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேனுறையும் “ மன்னூர் மாவட்ட வீதி அமைத்தல் ” என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

5. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னூர் கச்சேரியில் 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி (24.9.69) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 ம் பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

7. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 6 ம் பந்தியில் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னூர் மாவட்டம்.

9–637—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

### உபயோகமற்ற பொருட்கள் விற்பனை

1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை அரச கடற்படை, திருகோணமலை, டொக்யாட்டில் கீழே தரப்பட்டுள்ள உபயோகமற்ற பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2. விற்பனை செய்யப்படும் பொருட்களை அன்று காலை 8 மணி முதல் பார்வையிடலாம்.

3. ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உடனடியாக முழுப்பணமும் செலுத்தப்பட வேண்டும். ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருட்களை 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முன்பாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஆர். கதிர்காமர்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
கொழும்பு.
1969 ம் ஸ்ரீ செப்ரெம்பர் ௴ 8 ந உ.

| பதிவு எண் | பொருட்கள் |
|---|---|
| 1 .. | தேங்காய் துருவும் கருவி, இறைச்சி அரைக்கும் கருவி, சமையல் பாத்திரங்கள், பால்வடிகள், ஆரைப்பூட்டுகள், சோற்றுப்பானைகள், கத்திகள், பாத்திரங்கள், பொரியல் பாத்திரங்கள், யன்னல் சீலைகள் முதலியன. |
| 2 .. | நிலவிரிப்புகள், தலையணைகள், பழைய துணிகள், தட்டச்சுக் கருவிகள், கல்வனயிஸ் வாளிகள், உரல் உலக்கை முதலியன. |
| 3 .. | பட்டரிகள், பிளக்ஸ், சொக்கட்ஸ், பான்பெல்ட்ஸ், ஜெரிகான்ஸ், ஆமேஷர்ஸ், நங்கூரங்கள், சங்கிலிகள், விளக்குகள், வாளிகள் முதலியன. |
| 4 .. | பல விதமான மணிக்கூடுகளும் பட்டரிகளும், இன்னும் பலவும். |
| 5 .. | தீயணைப்பு வாளிகள், டோச்லைட்டுகள், பட்டரிகள், தீயணைப்புக் கருவிகள். |
| 6 .. | காப்பெற்ஸ், சாப்பாட்டுக் கரியர், வாளிகள், வெற்றுத் தகரங்கள், தெளிகருவிகள், பிக்கான்கள் முதலியன. |
| 7 .. | வெற்று அலம், சாக்குகள் சிறிதும் பெரிதும். |
| 8 .. | வெஸ்றஸ், காற்சட்டைகள், பூட்ஸ், சப்பாத்துகள், படுக்கை விரிப்புகள் முதலியன. |
| 9 .. | கிராங்ஸாவற்ஸ், தண்ணீர்க் குழாய்கள். |
| 10 .. | வெற்றுத் தகரங்கள். |
| 11 .. | குப்பை வாளிகள், வெற்றுத் தகரங்கள். |
| 12 .. | ஸ்பனேர்ஸ், டிரான்சிமீட்டரும் ரிசீர்வர்ஸ்ம் முதலியன. |
| 13 .. | அரிக்கன் விளக்குகள், மின் விளக்குகள், தகரங்கள், முள்ளுக் கரண்டிகள் முதலியன. |
| 14 .. | வெற்றுத் தகரங்கள். |
| 15 .. | சமையற் பாத்திரங்கள், சோற்றுப் பானைகள், கத்திகள், வாளிகள், பாத்திரங்கள், ஆரைப்பூட்டுக்கள். |

9–650—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

"லக்சல" கொழும்பு

இந்த ஸ்தாபனம் 26.9.69 முதல் 30.9.69 வரை வருடாந்த இருப்புக் கணக்கெடுத்தல் காரணமாய் மூடப்பட்டிருக்கும்.

பி. எச். பி. த சில்வா,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் பகுதி.

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் பகுதி,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 19 ந் உ.

9–509—19.9.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,872

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யூன் | ... | 6.6.69 | வெள்ளி | ... | 30.5.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 13.6.69 | வெள்ளி | ... | 6.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 20.6.69 | வெள்ளி | ... | 13.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 27.6.69 | வெள்ளி | ... | 20.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| யூலை | .. | 4.7.69 | வெள்ளி | .. | 27.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 11.7.69 | வெள்ளி | .. | 4.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 18.7.69 | வெள்ளி | .. | 11.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 25.7.69 | வெள்ளி | .. | 18.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஓகத்து | .. | 1.8.69 | வெள்ளி | .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 8.8.69 | வெள்ளி | .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 15.8.69 | வெள்ளி | .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 22.8.69 | வெள்ளி | .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 29.8.69 | வெள்ளி | .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | . | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | .. | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசெம்பர் | .. | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ௵ யூன் ௴ 13 ந் ௳.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.